**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 902/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | செல்வராணி |
| Father's Name/Husband Name: | கிட்டு |
| Village : | துரைமங்களம் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 53/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.05.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி ஆகாஷ் ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். என்னுடைய மகள் பெயர் குணவழகி. எதிரி என் மகளை காதலிப்பதாக சொல்லி தொந்தரவு செய்து வந்துள்ளார். இது குறித்து என்னிடம் எதுவும் செல்லவில்லை. சிறிது நாட்கள் கழித்து தான் எனது மகள் என்னிடம் எதிரி அவரை தொந்தரவு செய்ததாக என்னிடம் சொன்னார். நான் என் மகளிடம் ஏன் அப்போதே சொல்லவில்லை என்று கேட்டேன். அதற்கு என் மகள் எங்களிடம் சொன்னால் எதிரி சங்குப்பேட்டையில் உள்ள ஆட்களை வைத்து என்னையும், எனது கணவர் மற்றும் மகளையும் குத்தி கொலை செய்து விட்டு புதைத்து விடுவேன் என்று மிரட்டியதாக என் மகள் என்னிடம் சொன்னார்.

இது குறித்து பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். பிறகு எனது மகள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி எதிரிக்கு

பயந்து கொண்டு கல்லூரிக்கு செல்லாமல் வீட்டிலேயே இருந்தார். எதிரி என் மகளுடன் திருமணம் செய்த மாதிரி புகைப்படத்தை உருவாக்கி எங்களுடைய உறவினர்களுக்கும், நண்பர்கள் குடும்பத்திற்கும் பகிர்ந்து அவமானத்தை ஏற்படுத்திவிட்டார். சிறிது நாட்கள் கழித்து எனது மகளை கல்லூரிக்கு அனுப்பி வைத்தோம். எதிரி அங்கேயும் சென்று என் மகளைப் பார்க்க முயற்சி செய்துள்ளார். கல்லூர் நிர்வாகம் உள்ளே விடாததால் செல்போன் மூலமாக என் மகள் குணவழகிக்கு தொடர்பு கொண்டு ஆபாசமாக பேசியதாக என் மகள் என்னிடம் சொன்னார்.

எதிரியின் பெற்றோர் மற்றும் எதிரி ஆகியோர் சேர்ந்து எங்களை வழக்கை வாபஸ் வாங்குமாறு எங்களை ஆபாசமாக பேசினார்கள். அப்போது வெளியில் இருந்த அனைவரும் பார்த்ததால் எங்களுக்கு மிகுந்த அவமானம் ஆகிவிட்டது. எதிரி முகநூல் மற்றும் ஆன்லைனில் என் மகளை தவறாக சித்தரித்து அவரை தொடர்பு கொண்டால் எங்கு வேண்டுமானாலும் ரூம் போடலாம் என்று இணையதளம் மூலம் தகவலை பொய்யாக பரப்பியுள்ளார். அதனால் எனது மகள் மிகுந்த மன வேதனைக்கு உள்ளானார். இந்த தகவல் அருகில் இருந்தவர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் பார்த்து எனக்கு போன் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அதனால் எங்களுக்கு மிகுந்த அவமானம் ஏற்பட்டது. நாங்கள் நடந்ததை சொன்னோம்.

எதிரி குடும்பத்தார் எங்களை அசிங்க அசிங்கமாக திட்டியதாலும், என் மகளைப்பற்றி தவறாக இணையதளத்தில் வெளியிட்டதாலும், எனது மகள் கல்லூரிக்கு செல்லாமலும், மிகுந்த மன வேதனையுடனும் இருந்தார். எதிரி என் மகளை பின் தொடர்ந்து அவரது ஆசைக்கு இணங்க மறுத்தால் கொன்று விடுவதாக மிரட்டியுள்ளார். இது குறித்து எனது மகள் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார். எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. எனவே குறுக்கு விசாரணை இல்லை)**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.